# பாலியல் தாக்குதல்

## அவுஸ்திரேலியாவில், பாலியல் ரீதியாக யாரொருவரையும் தாக்குவது சட்ட விரோதமாகும்.

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், பாலியல் தாக்குதலை இழைக்கும் யாருக்கும் சிறைத் தண்டனை கிடைக்கக்கூடும்.

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாருமோ ஆபத்திலிருந்தால், **000** இல் காவல் துறையினரை அழையுங்கள். அவுஸ்திரேலியக் காவல் துறை பாதுகாப்பானதும் நம்பிக்கைக்குரியதும் ஆகும்.

இலவசமான மற்றும் இரகசியமான அறிவுரையாலோசனைக்கும் தகவல்களுக்கும் **1800 737 732** எனும் இலக்கத்தில் 1800 RESPECT ஐ அழையுங்கள்.

இலவச மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால் **131 450** எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

## எச்சூழ்நிலைகளிலும், பாலியல் தாக்குதலை Australian Government சகித்துக் கொள்வதில்லை.

பாலியல் தாக்குதல் என்பது சம்மதிக்காத ஒருவர் மீது செய்யப்படும் செயலாகும்.

பின்வருவன பாலியல் தாக்குதலில் உள்ளடங்கக்கூடும்:

- பாலியல் உறவு கொள்ளவோ, அல்லது பாலியல் ரீதியான செயல்களைச் செய்யவோ ஒருவரைக் கட்டாயப்படுத்துவது
- ஆபாசப் படங்களைப் பார்க்க ஒருவரைக் கட்டாயப்படுத்துவது; அல்லது
- ஒரு குழந்தையுடன் பாலியல் உறவு கொள்வது, அல்லது பாலியல் ரீதியான காரியங்களைச் செய்வது

உடன் சேர்ந்து வாழ்பவர், வாழ்க்கைத் துணைவர் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் மீது செய்யப்படும் பாலியல் தாக்குதலும் சட்ட விரோதமானது.

## ஆண்களுக்குள்ள அதே உரிமைகள் பெண்களுக்கும் உள்ளன.

அவுஸ்திரேலிய சட்டங்கள் ஆண்களையும் பெண்களையும் சமமாக நடத்தும்.

வன்முறை இல்லாத, சந்தோஷமான உறவிலும் சமூகத்திலும் வாழும் உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது.

மோசமாக நடத்தப்படுவதையோ அல்லது தீங்கிழைக்கப்படுவதையோ பெண்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

## கலாசார உணர்வுகளைக் கருத்தில்கொண்டு உங்களுக்கு உதவக்கூடிய சேவைகள் அவுஸ்திரேலியாவில் உள்ளன.

**1800 RESPECT** என்பது 'அவுஸ்திரேலிய தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு, குடும்ப வன்முறை ஆலோசனை சேவை' (Australia's National Sexual Assault, Family and Domestic Violence Counselling service) ஆகும். இலவச, இரகசியமான தொலைபேசி, இணைய வழி ஆலோசனையையும் தகவல்களையும் இது அளிக்கிறது. ஆலோசகர்கள் நீங்கள் சொல்வதை செவிமடுத்துக் கேட்பர், உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பர், நீங்கள் வாழும் பகுதியிலுள்ள மற்ற ஆதரவு சேவைகளுக்கு உங்களைப் பரிந்துரைக்க அவர்களால் இயலக்கூடும்.

**1800 737 732** எனும் இலக்கத்தினை அழையுங்கள் அல்லது 1800 RESPECT -இன் **www.1800RESPECT.org.au** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்

## உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவையா?

**131 450** எனும் இலக்கத்தில் 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை'யை **(Translating and Interpreting Service)** அழையுங்கள். மற்றச் சேவைகளுடன் தொடர்புகொள்ள TIS அமைப்பினால் உங்களுக்கு உதவ இயலும். TIS நிறுவனம் அறிவுரையாலோசனை அளிப்பதில்லை.